**தலைப்பு 288 – நில அளவையாளர் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழுள்ள ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று, வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 3.1.1,3.1.2 மற்றும் 3.1.3 ஆம் அட்டவனைகளில் உள்ளடக்கப்பட்ட வருமானக் குறியீடுகளுக்குரிய வருமானக் கணக்குகளும் நில அளவையாளர் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

தலைப்பு 288 – நில அளவையாளர் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தெம்பர் 25 ஆந் திகதி திணைக்களத்தின் நில அளவையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நில அளவையாளர் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.16 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறைவேற்றுகையில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களித்தன்மையை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1 | பதிவேடுகள் மற்றும் ஏடுகளைப் பேணியிருக்காமை. | 2.12 |
| | | 2 | எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியடைதல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை. | 2.1.2 |
| | | 3 | பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.2.1 |
| | | 4. | பணப்பெறுமதிக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் | 2.7 |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டிற்கான ஒழுங்கமைப்பு வெற்றியளித்துள்ளது என்பதற்கும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை | 1. | எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை. | 2.1.2 |
| | | 2. | பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துவதிலுள்ள குறைபாடுகள். | 2.2.1 |

| | | | |
|---|---|---|---|
| | சரியாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவற்றை முறைப்படியாகவும் முழுமையாகவும் தாமதமின்றியும் சேகரித்துக்கொள்வதற்கும் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பணத்தை கணக்கீடு செய்வதற்கும் அரசாங்கத்திற்கான பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்வதற்கு அதிகாரம் வழங்குவதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குவதனை மேற்பார்வை மற்றும் பரிசோதனை செய்வதற்கும் அவை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்து அதற்காக தாமதமின்றியும் சரியாகவும் கொடுப்பனவு செய்வதற்கு ஒழுங்குவிதிகள் வழங்குதல். | | |
| 128(1) (இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களை தனது திணைக்களம் பின்பற்றுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றதெனவும். | 1. பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை | 1.12 |
| | | 2. இணக்கமின்மைகள் | 2.13 |
| 128(1)(ஈ) | பெறுனவனவுகள், கொடுப்பனவுகள், வழங்கல்கள் என்பவற்றிற்காக போதியளவு உள்ளக சோதனை முறைமை பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதாகவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் | 2.10 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வு செய்யும் போது அவ்வாறு தீர்வு செய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கி உள்ளன எனவும், | 1. வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்வதிலுள்ள குறைபாடுகள் | 2.3(ஆ) |
| | | 2. சொத்துக்கள் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் | 2.3 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(எ) | அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரிப்பது தொடர்பான செயல் முன்னேற்றத்தைக் காட்டும் அறிக்கையை உரிய வேளைக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்பிவைத்தல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு சம்பந்தமான குறைபாடுகள் | 2.10 |
| 128(1)(ஏ) | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு சம்பந்தமான குறைபாடுகள் | 2.10 |
| 128(1) (ஐ) | அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது எதிர்பாாத்த சிக்கனம், விளைதிறன், ஒழுங்குமுறை, நேர்மை, ஆகிய விடயங்கள் தொடர்பாக முறையான கவனத்துடன் தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது | எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை | 2.1.2 |
| 128(1)(ஔ) | பிணை வைப்பதற்கு கட்டுப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் அப்போதைக்கு செல்லுபடியான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க பிணை வைத்தல் | உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைகளைப் பெற்றுக் கொள்வதிலுள்ள குறைபாடுகள் | 2.16 |
| 128(1) (கூ) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் /ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுவதாகவும் பொறுப்பாகும். | 1. பொறுப்பேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல் | 2.3(இ) |
| | | 2. உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணையைப் பெற்றுக்கொள்வதிலுள்ள குறைபாடுகள் | 2.16 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தின் எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத்திட்டம் சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்தின் 13 பிரதான செயற்பாடுகளில் 08 செயற்பாடுகள் மாத்திரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு நடவடிக்கையின் கீழுள்ள கூறுக்காக செலவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணம் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தின் வருமானத்தைச் சேகரிப்பது சம்பந்தமான இலக்குகளும் காலப்பகுதியும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டிருந்த திணைக்களத்தின் தாபனக் கட்டமைப்பில் 09 மாகாண அலுவலகங்களின் உதவிப்பணிப்பாளர் (நிதி) பதவியானது பணிப்பாளர் (நிதி) இன் நேரடி மேற்பார்வைக்கு உட்பட்டதாகத் தயாரிப்பதற்குப் பதிலாக மாகாண நில அளவையாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வைக்கு உட்பட்டதாகத் தயாரிக்கப்பட்டிருந்தது.

#### 3.1.2 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்ட பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ள முடியாதிருந்தது.

(அ) நியதிச்சட்ட தேவைப்பாடுகளுக்காக நிறைவேற்றப்பட வேண்டிய பொறியியல் ரீதியான நில அளவைகள் 2000 ஹெக்டயர்களில் 1100 ஹெக்டயர்கள் மாத்திரம் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கையை உள்ளடக்கும் வகையில் நில அளவை செய்யப்பட்ட காணிகளை தகவல் முறைமைக்குள் உள்ளடக்குவதற்காக நில அளவைகளை நாளது வரையாக்கும் 2880 பத்திரங்களை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 682 பத்திரங்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(இ) 03 நீண்ட கால கற்கை நெறிகளை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் ஒரு கற்கை நெறி மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

(ஈ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 60,000 காணித் துண்டு பொதிகளை (Parcel Fabric) நிறைவேற்றுவதற்கு இலக்கிடப்பட்டிருந்தும் 47,363 காணித்துண்டுகள் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தது.

### 2.2 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

#### 2.2.1 பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துதல்

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4 வழிகாட்டியின் பிரகாரம் விலை ஒப்பீட்டு முறைமையின் போது ஆகக் குறைந்த பொறியிடப்பட்ட 05 கேள்விகளைப் பெற்றுக் கொண்டு பெறுகைத் தீர்மானம் எடுக்கப்பட வேண்டி இருந்தும் ரூபா 8.9 மில்லியன்

செலவில் 06 நேர்த்தியான மட்டமிடல் (Precise Level) உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது இரண்டு கேள்விகளின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்துடன் இத்தீர்மானத்திற்கு நிதி விசேட நிபுனரின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1.9 மில்லியன் செலவில் 90 விரல் அடையாளமிடும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.9.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பராமரிப்புக் கிரயம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாது மதிப்பீட்டு நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்ததன் காரணமாக 06 ஆண்டுகள் பராமரிப்புக் கிரயத்தை உள்ளடக்கி குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரருக்குப் பதிலாக மற்றுமொரு கேள்விதாரர் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 490,070 மேலதிகமாகச் செலவு செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது.

(இ) Ink Tank வகையில் A3 அளவிலான 40 அச்சிடல் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு தேசிய போட்டி கேள்வி முறைமையின் கீழ் கோரப்பட்ட கேள்விகள் திறக்கப்பட்டதன் பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. பின்னர் விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் Ink Cartridge வகையான அச்சிடல் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு திணைக்களம் தீர்மானித்திருந்ததுடன் அதன் போது முதலாவது தடவையாக Ink cartridge வகையான அச்சிடல் இயந்திரங்களுக்காக குறைந்த விலையைச் சமர்ப்பித்த கேள்விதாரர் புறக்கணிக்கப்பட்டு கேள்விகள் கோரப்பட்டதன் காரணமாக ரூபா 1.22 மில்லியன் அதிக கிரயத்தை மேற்கொண்டு ரூபா 2.34 மில்லியனுக்கு இந்த இயந்திரங்களைக் கொள்வனவு செய்யவேண்டியிருந்தது. அவ்வாறே ரூபா 1.34 மில்லியன் பெறுகைத்திட்டத்தின் நிதி ஏற்பாட்டினை மிகைத்து செலவு செய்யப்பட்டிருந்ததுடன் கேள்விகள் திறக்கும் திகதி பிற்போடப்பட்டிருந்தும் அத்தகவல்கள் கேள்விதாரர்களுக்கு முறைப்படி தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 4.90 மில்லியன் செலவு செய்து அலுவலக மனைப்பொருட்கள், அலுவலக உபகரணங்கள், கணனி துணைக்கருவிகள், நில அளவை உபகரணங்கள், காகிதாதிகள் என்பவற்றைக் கொள்வனவு செய்யும் போது தேசிய போட்டி கேள்வி முறைமையின் அடிப்படையில் பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்ததுடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.2.2 (இ) வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி கோரும் இறுதித் திகதிக்கு முன்னரான திகதி வரை கேள்வி ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டிய போதிலும் கேள்வி திறப்பதற்கு இரண்டு வாரத்திற்கு முன்னைய திகதி கேள்வி ஆவணங்களைக் கொள்வனவு செய்யும் இறுதித் திகதியாகக் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக போட்டி கேள்விதாரர்களுக்கு முன்வருவதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(உ) இரண்டு உத்தியோகத்தர்களால் பெற்றுக் கொண்ட முற்பணங்களைப் பயன்படுத்தி விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் இரும்புக் குழாய்களை உள்ளடக்கி மேலும் சில பொருட்களும் அத்துடன் சப்பாத்துக்களும் மேலங்கிகளும் கொள்வனவு செய்வதற்கு முறையே ரூபா 127,150 மற்றும் ரூபா 117,915 செலவு செய்யப்பட்டிருந்தன. குறைந்த விலைகள் சமர்ப்பித்த இரண்டு போட்டி கேள்விதாரர்களின் கேள்விகள் மாற்றம் செய்யப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டதுடன் அதன் காரணமாக அதிக விலைகளின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டதா என்பதனை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதுள்ளது.

### 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) வாகனங்களின் பயன்பாடு**

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வாகனங்கள் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் சேவை செய்யப்படாமை

திணைக்களத்திற்குச் சொந்தமான 55 வாகனங்கள் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக சேவை செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான பழுதுபார்த்தல் செலவுகள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துச் சென்றமைக்கு இந்த நிலைமை காரணமாக இருந்தது.

(ii) எரிபொருள் நுகர்வைப் பரீட்சித்தல்

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் 104 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு மீளாய்வாண்டின் போது பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

மீளாய்வாண்டிற்கான மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக்காட்டிய பொருட்களின் 1459 பற்றாக்குறைகளும் 1150 மிகைகளும் சம்பந்தமாக 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கையின் 3.2.4 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததுடன் மெய்மையாய்வு அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பயன்படுத்த முடியாத பொருட்கள் சம்பந்தப்பட்ட 47 ஆம் இலக்க படிவம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

பிம்சவிய நிதி ஏற்பாட்டின் மூலம் ரூபா 312 மில்லியன் செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட நில அளவை உபகரணங்களை உள்ளடக்கிய பல்வேறு மூலதனச் சொத்துக்களும் ரூபா 82 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களும் காணியும் அமைச்சினால் பொறுப்பேற்கப்படாது பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**2.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

திணைக்களத்தினால் மூன்று மொழிகளிலும் தரவு முறைமையைத் தயாரிப்பதற்காக ரூபா 750,000 உடன்படிக்கை செய்த பணத்தின் அடிப்படையில் Textual Data Base of Land Parcel மென் பொருளைக் கொள்வனவு செய்வதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஒரு கம்பனிக்கு முதலாவது பகுதிக் கொடுப்பனவுப் பணமாக ரூபா 150,000 பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் பின்னர் மென்பொருளைப் பெற்றுக்கொள்வதில்லை எனத் தீர்மானித்ததன் காரணமாக செலுத்தப்பட்டுள்ள பணம் விளைவற்றதாக இருந்தது.

**2.5 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

திணைக்களம் தொடர்பாக 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக திணைக்களத்தால் நிவர்த்தி செய்யப்படாத பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | தொடர்புபட்ட விடயம் |
|---|---|
| பந்தி இலக்கம் | |
| 3.1 | மின் உபகரணங்கள் பதிவேடு மற்றும் சேதங்கள் பதிவேடு முறையாகப் பேணப்பட்டிருக்காமை. |
| -3.4 (அ) | ரூபா 4.68 மில்லியன் தொகையான அரசாங்க உத்தியோகத்தர்களின் கடன் மீதியை அறவிடாமை. |
| 3.7 (ஆ) | ஒரு நில அளவையாளரினால் ஒரு மாதத்திற்கு நில அளவை செய்ய வேண்டிய ஆகக்குறைந்த காணித் துண்டுகளின் எண்ணிக்கை 20 ஆகிய நியமத்தை (Norms) அதிகரிக்காமை. |
| 3.11 (ஆ) | 695 நில அளவை வெளிக்கள உதவியாளர்களை அக்கடமைகளுக்குப் புறம்பான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஈடுபடுத்தியமை. |

**2.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒரு நில அளவையாரால் ஒரு மாதத்திற்கு நில அளவை செய்யப்பட வேண்டிய காணித்துண்டுகளின் எண்ணிக்கை 20 என்ற நியமத்தை (Norms) நிகழ்காலத்தின் முன்னேற்றகரமான தொழில்நுட்ப உபகரணங்களின் பயன்பாட்டுடன் அதிகரிக்காது அதனடிப்படையில் திட்டமிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் 19 செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் 28 சதவீதத்திலிருந்து 227 சதவீதம் வரையான முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டியிருந்தும் புதிய தொழில்நுட்ப மேம்பாட்டினை கவனத்தில் கொண்டு இந்த ஆகக் குறைந்த காணித்துண்டுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 01 ஆண்டிலிருந்து 28 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலவீச்சில் 65 சந்தர்ப்பங்களின் போது இடம்பெற்ற ரூபா 6.1 மில்லியன் தொகையான வாகன விபத்துக்களை உள்ளடக்கிய ஏனைய நட்டங்களை அறவிடுவதற்காக அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்காக போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேவைப்பாட்டினை முறைப்படியாக இனங்கண்டுகொள்ளாது 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 5.47 மில்லியன் செலவு செய்து வரைதல் கடதாசிகள் மற்றும் லிதோ கடதாசிகளின் சில வகைகளை கொள்வனவு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் அவற்றில் ரூபா 3.34 மில்லியனான அல்லது 61 சதவீதமான இருப்பு எஞ்சியிருந்தது.

(ஈ) திணைக்களத்தின் 13 வாகனங்கள் 02 ஆண்டுகளிலிருந்து 06 ஆண்டுகள் வரையான கால வீச்சில் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டன. இந்த வாகனங்களை விற்றுத் தீர்த்து அரசாங்கத்திற்கு வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 8.90 மில்லியன் செலவு செய்து 93 லெப்டொப் கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விகளை மதிப்பீடு செய்த போது இரண்டு ஆண்டுகள் உத்தரவாத காலமும் மிக அதிக வேகமும் கொண்ட கணனியைக் கொள்வனவு செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் நில அளவை நடவடிக்கைகளுக்குத் தேவையான மென்பொருள் வசதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ரூபா 4.55 மில்லியன் செலவு செய்து 44 டெஸ்க்டொப் கணனிகளைக் கொள்வனவு செய்த போது வலு செயற்திறன் (Power Efficiency) மற்றும் சுற்றாடலுக்குச் சாதகமானவை (Eco Friendly) ஆகிய சாதகத் தன்மைகள் கவனத்திற்கு கொள்ளப்படாதிருந்ததுடன் விடய நிபுனர்களால் மாதிரி ஆவணங்கள் தயாரிக்கப்படாததன் காரணமாக அடிக்கடி மாதிரிகளைத் திருத்தம் செய்து பெறுகை நடவடிக்கைகளை சிக்கலுக்குரியதாக்கி இருந்தது.

(எ) 2009 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை திணைக்களத்திற்கு நீதிமன்றங்களிலிருந்து பிரதேச செயலகங்களிலிருந்தும் கிடைத்த 20091 நில அளவைக் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு முகாமைத்துவத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.7 பணப் பெறுமதிக் கணக்காய்வு

(அ) ஆகாயத் தரவு தயாரிக்கும் நடைமுறை மற்றும் அனைத்து படம் வரையும் செயற்பாடுகளுக்காக 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை முறையே ஒரு Arc GIS Sever மென்பொருளையும் 08 Arc GIS Standard மென்பொருட்களையும் கொள்வனவு செய்வதற்காக ரூபா 10.69 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் Arc GIS Sever மென்பொருட்களின் உத்தரவுப் பத்திரங்களைப் புதுப்பிப்பதற்காக ரூபா 2.43 மில்லியனும் அந்த மென்பொருட்களின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 2.30 மில்லியனும் ஆக ரூபா 15.42 மில்லியன் மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2006 இன் 08 ஆம் இலக்க தேசிய பெறுகை முகவராண்மைச் சுற்றறிக்கையின் 1.2.1 (இ) வழிகாட்டியின் பிரகாரம் தகைமையுள்ள மற்றும் ஆர்வமுள்ள தரப்பினர்களுக்கு பங்குபற்றுவதற்காக சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டிய போதிலும் கேள்விகள் கோரப்படாது ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து நேரடியாக உரிய மென்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) பெறுகை வழிகாட்டியின் 9.7.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பின்பற்றப்பட வேண்டிய விசேடத்துவமான வழிகாட்டிகளின் சிக்கலான தகவல் முறைமையானது பெறுகைகளின் போது பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 ஆம் ஆண்டில் ரூபா 1.89 மில்லியன் செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருட்களைத் தவிர்த்து ஏனைய மென்பொருட்களின் கொள்வனவின் போது பெறுகை வழிகாட்டிக்கோவையின் 2.8.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ஒரு தொழில்நுட்பக் குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் மென்பொருட்கள் சம்பந்தமாக வெளிவாரி விசேட நிபுனரின் ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டு வரை வருடாந்த புதுபித்தல் மற்றும் பராமரிப்புச் செலவு ரூபா 4.73 மில்லியனாகும். பெறுகைத் தீர்மானங்களை எடுக்கும் போது இந்த பராமரிப்புச் செலவு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாததுடன் எஞ்சியுள்ள ஆண்டுகளுக்காகவும் இக்கிரயத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி மாத்தறை மாவட்ட நில அளவையாளர் அலுவலகம் மற்றும் கதிர்காமம் சுற்றுலா விடுதிக்காக புதிதாக ஒரு பகுதியைச் சேர்த்துக் கொள்ளும் நிர்மாண ஒப்பந்தம் இடம் பெற்றிருந்ததுடன் இதற்காக ரூபா 26.8 மில்லியன் மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

(i) மாத்தறை மாவட்ட நில அளவையாளர் அலுவலகத்தை நிர்மாணிக்கும் போது 05 வேலை விடயங்களுக்காக ஒப்பந்தகாரர் செய்த வேலையின் அளவை மிகைத்து ரூபா 482,864 செலுத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் அது பிடித்துவைத்தல் பணத்திலிருந்து அறவிடப்பட்டிருந்தது.

(ii) கதிர்காமம் சுற்றுலா விடுதியை நிர்மாணிக்கும் போது Tie Beam போடுவதற்காக காண் வெட்டுதல் கொங்கிரீட் கம்பி மற்றும் 18 சதுர அடியான Aluminium Lovers Area ஆகிய செய்யாத வேலைகளுக்காக ரூபா 243,524 செலுத்தப்பட்டிருந்ததுடன் 16 விடயங்களுக்காக செய்த வேலைகளின் அளவை மிகைத்து ரூபா 677,721 செலுத்தப்பட்டிருந்தும் மேலும் Slab Beam (“18x19”) இற்காக 98 அடி நீளத்திற்கு ரூபா 51,636 வீதம் இரண்டு தடைவ செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மாத்தறை மாவட்ட நில அளவையாளர் அலுவலகத்தை நிர்மாணிக்கும் போது முதலாவது திட்டத்தின் பிரகாரம் கட்டிடத்தை 03 அடிக்கு உயர்த்தும் போது நிர்மாணிக்கப்பட வேண்டிய படிக்கட்டுக்கான அத்திவாரத்தைப் போடுவதற்கு ரூபா 95,080 செலவு செய்யப்படிருந்ததுடன் பின்னர் கட்டிடத்தை 03 அடிக்கு உயர்த்துவதற்கு எடுத்த தீர்மானம் மாற்றப்பட்டதன் காரணமாக இது விளைவற்ற செலவாக மாறியிருந்தது.

(iv) விலை ஒப்பீட்டு முறைமையின் அடிப்படையில் கேள்விதாரர்களைத் தெரிவு செய்யும் போது 2011 பெப்ரவரி 15 ஆந் திகதிய 488(1) ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் ரெயின்போ பக்கத்திலுள்ள பெயர் பட்டியல் மற்றும் இணைய தளம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் கதிர்காமம் சுற்றுலா விடுதியை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் போது அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கேள்விக்கு முன்னைய கூட்டங்களை நடத்தாமை, கேள்விகள் திறக்கும் சந்தர்ப்பத்தின் போது பங்குபற்ற வேண்டுமென கேள்விதாரர்களுக்குத் தெரிவிக்காமை, கேள்விகள் திறக்கும் சந்தர்ப்பத்தின் போது தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் மாத்திரம் வருகை தந்திருந்தமை என்பவற்றின் காரணமாக வெளிப்படைத்தன்மை இன்றி கேள்வி திறக்கும் நிலைமை காணப்பட்டது. பொருத்தத் தன்மைச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாது கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

**2.8 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

---

2017 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்துள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் மற்றும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 1945.81 | 1877.70 | 68.11 | 3.50 |
| | மூலதனம் | 137.30 | 113.77 | 23.53 | 17.14 |
| | மொத்தம் | 2083.11 | 1991.47 | 91.64 | 4.40 |
| 2014 | மீண்டுவருபவை | 2363.77 | 2355.19 | 8.58 | 0.36 |
| | மூலதனம் | 147.90 | 122.50 | 25.40 | 17.17 |
| | மொத்தம் | 2511.67 | 2477.69 | 33.98 | 1.35 |
| 2015 | மீண்டுவருபவை | 3026.04 | 2966.92 | 59.12 | 1.95 |
| | மூலதனம் | 241.30 | 231.70 | 9.60 | 3.98 |
| | மொத்தம் | 3267.34 | 3198.62 | 68.72 | 2.10 |
| 2016 | மீண்டுவருபவை | 3360.19 | 3326.86 | 33.33 | 0.99 |
| | மூலதனம் | 247.66 | 202.00 | 45.66 | 18.44 |
| | மொத்தம் | 3607.85 | 3528.86 | 78.99 | 2.19 |
| 2017 | மீண்டுவருபவை | 3695.26 | 3377.73 | 317.53 | 8.59 |
| | மூலதனம் | 222.40 | 136.86 | 85.54 | 38.46 |
| | மொத்தம் | 3917.66 | 3514.60 | 403.07 | 10.29 |

மீளாய்வாண்டு சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மிகை நிதி ஏற்பாடுகளை வழங்குதல்**

32 செலவு விடயங்களுக்காக ரூபா 1,709.55 மில்லியன் மொத்த தொகையான மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 1,348.97 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக சேமிக்கப்பட்ட ரூபா 360.58 மில்லியனானது வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 7 சதவீதத்திலிருந்து 74 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

## 2.9 ஏனைய அமைச்சுக்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்

காணிகளை அமைச்சினால் காணிகள் வங்கி நிகழ்ச்சித் திட்டம் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றிக்காக ரூபா 220 மில்லியன் மொத்த தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை அவற்றில் ரூபா 198.43 மில்லியன் மொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 21.57 மில்லியன் அல்லது 9.8 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிவேக Optical Cable களின் மூலம் நில அளவையாளர் திணைக்களத்தை வயர்களால் இணைப்பதற்காக ரூபா 23.05 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 9.7 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் தகவல் முறைமை பெறுகையின் போது தேசிய பெறுகை முகவராண்மையை விசாரித்து விசேட கேள்விகளைக் கோரும் ஆவணங்கள் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் மொத்த கிரய மதிப்பீடும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 9.78 மில்லியன் செலவு செய்து 100 லெப்டொப் கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மாதிரி ஆவணத்தை தயாரிப்பதிலுள்ள பலவீனத்தின் காரணமாக Spil – Resistant Keyboard உடன் கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் அந்த வசதிகளுடனான கணனிகள் பெற்றுக்கொள்ளப்படாதிருந்தது. ஒரு கால அட்டவணையின் பிரகாரம் பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையின் காரணமாக கொள்வனவு செய்யும் நடவடிக்கை ஆறு மாதங்கள் தாமதித்திருந்ததுடன் இணங்கிக் கொண்ட மாதிரியான கணனிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 6 மில்லியன் செலவில் பழைய நில அளவைப் படங்களை ஆவணப்படுத்துதல் மற்றும் தரவு முறைமைக்குள் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் ஐந்து இலட்சம் அளவான நில அளவைப் படங்கள் தரவு முறைமைக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தும் பேணிபாதுகாக்கப்பட வேண்டிய அனைத்து பழைய நிலஅளவைப் படங்களை தரவு முறைமைக்குள்ள விரைவாகச் சேர்த்துக்கொள்வதற்காக நடைமுறையில் அமுல்படுத்தக் கூடிய ஒரு வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 103.56 மில்லியன் நிதி ஏற்பாடானது உரிய நிகழ்ச்சித்திட்டத்திற்குப் புறம்பாக திணைக்களத்தின் சாதாரண செலவுகளுக்காகச் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஒட்டுமொத்த செயல்முன்னேற்றம் 12 சதவீதமாகக் காணப்பட்டிருந்தும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஊக்குவிப்பு படியாக ரூபா 400 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.10 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு

திணைக்களத்திற்குரிய 28801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியான வை | இழிவு எல்லை | உள்ளபடியா னவை | உச்ச எல்லை | உள்ளபடியா னவவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 166.00 | 163.32 | 110.00 | 121.52 | 400.00 | 375.51 |

அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 4,758,974 ஆக இருந்ததுடன் அவை 01 ஆண்டிலிருந்து 35 ஆண்டுகள் வரையான கால வீச்சில் காணப்பட்டு வந்தது. அந்த நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

## 2.11 பொதுவைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 03 பொதுவைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் ரூபா 14.81 மில்லியன் கூட்டு மொத்தமாகும். அவற்றில் 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 3.2 மில்லியன் கூட்டுமொத்தமான 03 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.12 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை**

திணைக்களத்தினால் மின் உபகரணங்கள் தொடர்பான ஒரு பதிவேடும் பெறுகைக் குழுவுக்கான வருகைப் பதிவேடும் பேணப்படாதிருந்ததுடன் நிதி நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்காக ஒரு பிணைப் பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை.

**2.13 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்பட்ட 22 வாகனங்கள் மற்றும் 265 குழாம் வாகனங்காளுக்காக நிதிப்பிரமாணங்கள் 1646 இன் பிரகாரம் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.14 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**2.14.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவுகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரித்த, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடமான பதவியணியினர் |
|---|---|---|---|---|
| (i) | சிரேஸ்ட மட்டம் | 1139 | 965 | 174 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 83 | 55 | 28 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1340 | 957 | 383 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 4896 | 4006 | 890 |
| | மொத்தம் | 7458 | 5983 | 1475 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

இலங்கை நில அளவையாளர் சேவையின் பதினைந்து உத்தியோகத்தர்கள், மூன்று நில அளவை வெளிக்கள உதவியாளர்கள், தொலைக் கல்வி நிபுனர் ஆகியோர் பாதுகாப்பு அமைச்சிற்கும் மின்வலு அமைச்சிற்கும் முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

**(ஆ) பதவியணினரைப் பயிற்றுவித்தல்**

திணைக்களத்தின் 2302 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்காக மீளாய்வாண்டில் பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிர்ணயிக்கப்பட்ட கடமைகளுக்குப் புறம்பாக சேவையில் ஈடுபடல்**

54 நில அளவை வெளிக்கள உதவியாளர்கள் தலைமை அலுவகத்தில் அலுவலக ஊழிய உதவியாளர்கள், சாரதிகள் மற்றும் காவலாளிகளாக இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

## 2.15 நிதிக்கட்டுப்பாடு சம்பந்தமான கடமைகளை ஒப்படைத்தல்

-------------------------------------------------------------------------------------------------------

நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் நிதி அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் ஒப்படைக்கப்பட்ட கடமைகளைக் காட்டும் ஒரு பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.16 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பிணை வைத்தல்

---------------------------------------------------------------------------------------------

திணைக்களத்தின் நிதிக்குப் பொறுப்பான 37 சிறாப்பர்களுக்காக நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை.